. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

ஒரு விரல் புரட்சி செய்வோம்! நம் உரிமையை நிலைநாட்டுவோம்! தேர்தல் நாள் ஏப்ரல் 23 — தின தமிழ்


# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936


வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்! செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 31.03.2026 • மலர் 04 • இதழ்: 89 • Edition : Nagercoil • 31.03.2026 • Vol : 04 • Issue : 89 • Page : 4 • Rs. 5/-

## இந்தத் தேர்தலோடு

# ஸ்டாலின் விடைபெறப்போகிறார்

## பெரம்பூரில் விஜய் பிரச்சாரம்

சென்னை, மார்ச். 31

பெரம்பூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு ஊர்வலமாக வந்த தவெக தலைவர் விஜய், 'இந்தத் தேர்தலோடு முதல்வர் மு.க.ஸ்டாலின்விடைப் பெறப்போகிறார்' என்று ஆவேசமாகக் பேசினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று (மார்ச் 30) தொடங்கியது. அதனைத்தொடர்ந்துதவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்தத் தொகுதியில் திமுக சார்பில் ஆர்.டி. சேகர், பாமக சார்பில் ம.திலகபாமா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல்செய்தார். தொடர்ந்து ஊர்வலமாக வந்த அவர் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய விஜய், "நம்மைப் பிடித்தவர்கள் உள்ள இடத்திலிருந்து பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும் என நினைத்தேன். தமிழகமே எனக்குப் பிடித்த இடம்தான். அதனால், தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் பிரச்சாரத்தைத் தொடங்கலாம். ஆனால் நம் வீட்டின் வாசலில் இருந்து, நம் தாய் வீட்டிலிருந்து தொடங்குவது போல், பிரச்சாரத்தைத் தொடங்க முடிவு செய்தேன், அதனால் இங்கு பெரம்பூரில் இருந்து தொடங்குகிறேன்.

வட சென்னையின் அடையாளங்களான லூர்து அன்னை தேவாலயம், பிரசித்தி பெற்ற கோயில், பல மசூதிகள் இருக்கும் இந்த் தொகுதியில் பிரச்சாரத்தைத் தொடங்குகிறேன். 'உன்னை மதிக்கும் உழைக்கும் மக்கள் உள்ள தொகுதியிலிருந்து இருந்து பிரச்சாரத்தைதொடங்கு' என எனது மனம் சொன்னதால் இங்கிருந்தே தொடங்குகிறேன்.

என் நெஞ்சில் குடியிருக்கும் பெரம்பூர் மக்களே, போதைப் பொருள் புழக்கம் மிகுந்த, பெண்களுக்கு பாதுகாப்பில்லாத, ஊழல் மிகுந்த தமிழகத்துக்கு ஒன்றுக்கும் உதவாத திமுக ஆட்சிதான் காரணம். இப்படிப் பட்ட ஆட்சி நடத்திய ஸ்டாலின் இத்தேர்தலோடு விடைபெறப் போகிறார். நம் வீட்டுப் பெண் பிள்ளைகள், இரவில் கழிவறை செல்லக் கூட முடியவில்லை, மூதாட்டியைக் கூட விட்டுவைப்பதில்லை. டீக்கடையில் டீ குடிக்கச் சென்றால் கூட போதை ஆசாமிகள் வெட்டு, குத்துக்கு மக்கள் ஆளாகிறார்கள்.



இந்த தீய சக்தி திமுக ஆட்சியில் பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா?, ( விஜய்யின் கேள்விக்கு இல்லை என தவெகவின ஆர்ப்பரித்தனர்). ஸ்டாலின் ஆட்சிக்கு மக்கள் பாதுகாப்பு மீது அக்கறையில்லை. தன் குடும்பத்தின் சொத்தைப் பெருக்குவதிலேயேதான் அக்கறை.

நகராட்சி நிர்வாகத் துறை வேலைவாய்ப்பில் நடந்துள்ள ஊழல் இளைஞர்கள் மீதான அநீதி. மக்களுக்குப் பாதுகாப்பு தர இயலாத, மக்கள் மீது அக்கறையில்லாத இந்த திமுக ஆட்சியைத் தூக்கி எறிவோம்.

அதனால், கொள்ளையடித்தப் பணத்திலிருந்து அவர்கள் ஓட்டுக்குப் பணம் கொடுத்தால் அதை, வாங்கிக் கொண்டு பதிலுக்கு அவர்கள் காதில் விசில் ஊதி அனுப்புங்கள். உங்கள் மகன், அண்ணன், தம்பி, பிள்ளை என நினைத்து எனக்கு வாக்களியுங்கள். எனக்கு ஒரு முறை வாக்களியுங்கள், வாய்ப்பு கொடுங்கள்.

ஏப்ரல் 23ம் தேதியன்று மறவாமல் வாக்களியுங்கள். ஜென் ஸீ இளைஞர்களே வாக்களிக்கத் தவறிவிடாதீர்கள். தேர்தல் நாளில் வாக்குப் பதிவு இயந்திரத்தில் விசில் சின்னத்துக்கு எதிரான பொத்தானை அழுத்தத் தவறாதீர்கள். நம்பிக்கையாக இருங்கள். நல்லதே நடக்கும்." என்று விஜய் பிரச்சாரத்தில் பேசினார்.

## "திமுக தேர்தல் அறிக்கை யாருக்கும் பயன்படாத ஆணி" அன்புமணி விமர்சனம்

சென்னை மார்ச். 31

"வரும் தேர்தலில் திமுகவை வீழ்த்த தமிழக மக்கள்உறுதிபூண்டிருப்பதால் அவர்களின் தேர்தல் அறிக்கை யாருக்கும் பயன்படாத ஆணி தான்," என்று பாமக தலைவர் அன்புமணி விமர்சித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்காக திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கான எந்தத் திட்டமும் இல்லை; மக்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்யும்சதுரங்கவேட்டை வாக்குறுதிகள் தான் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில் திமுக தேர்தல் அறிக்கை என்பது இந்தத் தேர்தலின் கதாநாயகனும் அல்ல... கதாநாயகியும் அல்ல. மாறாக வில்லனாகவும், காமெடியனாகவும் தான் உள்ளது.

2021ம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் 505 வாக்குறுதிகளை அளித்த திமுக, அவற்றில் வெறும் 66ஐ மட்டும் தான் நிறைவேற்றியது, 439 வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தியிருந்தேன். இப்போது திமுக வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள 517 வாக்குறுதிகளில் 63 வாக்குறுதிகள் முந்தைய தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தவை தான். அவற்றுக்கு வேறு நாமகரணங்களைச் சூட்டி புதிய வாக்குறுதிகளைக் காட்டி மோசடி செய்ய திமுக முயன்றிருக்கிறது. இது தோல்வியின் அடையாளம்.

2021ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அரசுத் துறைகளில் காலியாக உள்ள மூன்றரை லட்சம் இடங்கள் நிரப்பப்படும்; 2 லட்சம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்த திமுக, 50 ஆயிரம் பேருக்கு மட்டுமே அரசு வேலை வழங்கியது. ஆனால், இப்போது ஒன்றரை லட்சம் அரசு பணியிடங்கள் காலியாகுமாம்; அப்போது அந்த இடங்கள் உடனடியாக நிரப்பப்படுமாம். ஏற்கனவே காலியாக உள்ள 6 லட்சத்திற்கும் மேற்பட்ட காலியிடங்களை நிரப்பத் துப்பில்லாத திமுகவுக்கு இப்படி ஒரு வாக்குறுதி அளிக்க எந்தத் தகுதியும் இல்லை.

தனியார் துறைகளில் 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வழங்கப்ப டும்; தனியார் நிறுவன வேலை வாய்ப்புகளில் 75 விழுக்காட்டை தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்க வகை செய்யும் சட்டம் நிறைவேற்றப்படும்என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், அத்தகைய சட்டத்தையும் நிறைவேற்ற வில்லை; 50 லட்சம் பேருக்கு வேலையும் வழங்கவில்லை. ஆனால், இப்போது 50 லட்சம் இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வழங்கப்படும் என்ற பழைய வாக்குறுதியையே மீண்டும் அளித்து ஏமாற்ற முயல்கிறது திமுக. இத்தகைய மோசடிகளை தமி ழ்நாட்டு இளைஞர்கள் ஒருபோதும் நம்ப மாட்டா ர்கள். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்து நீட் தேர்வை ரத்து செய்வதற்கானது என்று வாக்குறுதி அளித்து மக்களை ஏமாற்றித் தான் கடந்த முறை திமுக ஆட்சிக்கு வந்தது. ஆனால், நீட் தேர்வை ரத்தும் செய்யாமல், தமிழ்நாட்டிற்கு விலக்கும் பெறாததால் இதுவரை 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால், கொஞ்சம் கூட தோல்வி உணர்வும், குற்ற உணர்வும் இல்லாமல், நீட் என்ற பெயரை மட்டும் தவிர்த்துவிட்டு, மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்விக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள் அனைத்தையும் ரத்து செய்ய வலியுறுத்துவோம் (வாக்குறுதி எண் 1 (9)) என்று வாக்குறுதி அளித்திருக்கிறது திமுக.

அதேபோல், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவோம் என்ற வாக்குறுதியை கடந்த 50 ஆண்டுகளில் 20ம் முறையாக திமுக அளித்திருக்கிறது. 18 ஆண்டுகள் மத்திய அரசில் அங்கம் வகித்த திமுக அதற்காக துரும்பைக் கூட கிள்ளிப்போடவில்லை. தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப்பாடமாகவும், கட்டாய பயிற்று மொழியாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு வக்கில்லாத திமுக, தமிழையும், எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள பிற 21 மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழியாக்கப் போவதாக அறிவித்திருப்பது வெட்கக்கேடான நகைச்சுவையாகும்.

தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி 125 லட்சம் டன்னாக உயர்த்தப்படும் என்பதை தேர்தல் வாக்குறுதியாக திமுக அறிவித்திருக்கிறது. உண்மையில் கடந்த 2023 24ம் ஆண்டிலேயே தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியை 125 லட்சம் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அப்போதைய வேளாண்துறை இயக்குனரும், இப்போதைய வேளாண் துறை செயலாளருமான தட்சிணாமூர்த்தி அறிவித்திருந்தார். அதன் பிறகு மூன்று ஆண்டுகளாகியும் அந்த இலக்கை எட்ட முடியாத திமுக அரசு, இப்போது அடுத்த ஐந்தாண்டுகளில் எட்டுவதற்கான வாக்குறுதியாக அந்த இலக்கை அறிவித்திருப்பது தோல்வியின் வாக்குமூலம் ஆகும்.

எந்த வகையில் பார்த்தாலும் திமுகவின் தேர்தல் அறிக்கை மக்களுக்கு பயனளிக்கக் கூடியதோ, வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியதோ அல்ல. ஏற்கனவே 505 வாக்குறுதிகளை அளித்து அவற்றில் 87 % வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் துரோகம் செய்த திமுகவின் வாக்குறுதிகளை மக்கள் நம்ப மாட்டார்கள். வரும் தேர்தலில் திமுகவை வீழ்த்த தமிழ்நாட்டு மக்கள் உறுதி பூண்டிருப்பதால் அதன் தேர்தல் அறிக்கை யாருக்கும் பயன்படாத ஆணி தான்" என்று அன்புமணி கூறியுள்ளார்.

## காரைக்குடி தொகுதியில் சீமான் வேட்புமனு தாக்கல்

காரைக்குடி, மார்ச். 31

காரைக்குடி தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அவரது சொந்த தொகுதியான காரைக்குடியில் இம்முறை களமிறங்கியுள்ளார்.

இந்த சூழலில், காரைக்குடி தொகுதியில் சீமான் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். வேட்புமனுத் தாக்கல் செய்தபோது சீமானுடன் அவரின் தாய் மற்றும் மனைவி கயல்விழி ஆகியோர் உடனிருந்தனர்.

காரைக்குடி தொகுதியில் நாதக சார்பில் சீமான், அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அமமுக சார்பில் தேர்போகி பாண்டி, தவெக சார்பில் பிரபு ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திமுக கூட்டணியில் இந்த தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சீமான், "ஆட்சிக்கு வந்தால் ரூ.2 ஆயிரம், ரூ.2500, ரூ.3000 தருவதாக தலைவர்கள் வாக்குறுதி அளிக்கின்றனர். படித்துவிட்டு வேலையில்லாதவனுக்கு வேலை கொடுப்பதற்கு பதிலாக, ரூ.4 ஆயிரம் தருவதாக சொல்பவர் எப்படி நல்ல தலைவராக இருக்க முடியும். டாஸ்மாக் கடையை மூடுவதாக ஒருவருமே வாக்குறுதி அளிக்கவில்லையே. பத்தரை லட்சம் கோடி ரூபாய் கடன் இப்போதே உள்ளது. இப்போது நீங்கள் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற மேலும் பல லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்குவீர்கள். கடன் வாங்கி நிறைவேற்றிய எந்த திட்டமாவது தரமாக உள்ளதா?.

ஒரு இனத்தின் மகனாக, இலவசங்கள் கொடுப்பதை தன்மானத்துக்கு எதிரானதாக நினைக்கிறேன். நேர்மையான நல்லாட்சியை கொடுப்பதாக சொல்பவர்கள் ஏன் இலவசங்களை கொடுக்கவேண்டும்.

மலை, மணல், இயற்கை வளம் எல்லாவற்றையும் சுரண்டிவிட்டார்கள், எதிர்காலம் என்னவாகும். கள்ளச்சாராயம் குடித்து இறந்தவனுக்கு ரூ.10 லட்சம் கொடுத்து ஊக்கப்படுத்திய அரசுதானே இது.

இவர்கள் கொடுக்கும் இலவசத்துக்கு ஏன் கையேந்த வேண்டும். நம் மானமும், வீரமும் மரத்துப்போய்விட்டதா?. அவர்கள் கைக்காசில் இருந்தா இலவசம் தருகிறார்கள். அனைத்து வரிகளையும், விலைவாசிகளையும் உயர்த்தி தான் இலவசம் கொடுக்கிறார்கள். அத்தியாவசிய பொருட்களை வாங்கும் தற்சார்பு நிலையை கூட மக்களுக்கு ஏற்படுத்த முடியவில்லையா?" என்றார்

## திமுகக்கு ஆதரவாக உள்ள போலீஸாரை மாற்ற வேண்டும்

### கல்யாணசுந்தரம் கோரிக்கை

சென்னை, மார்ச். 31

திமுக அரசுக்கு ஆதரவாக செயல்படும் போலீஸாரை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்ய வேண்டும் என்று அதிமுக தலைமைக் கழக பேச்சாளர் கல்யாண சுந்தரம் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக, சென்னை ராயப்பேட்டையில்உள்ளஅதிமுகதலைமை அலு வலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், சென்னை ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் ஆஜராகுமாறு எனக்கு கடந்த 28ம் தேதி சம்மன் வந்தது. கடும் பணிச்சூழலுக்கு இடையிலும், காவல்நிலையத்துக்குச்சென்று ஆய்வாளரை சந்தித்தேன்.

என்ன வழக்கு என்று என்னிடம் எதுவுமே கூறவில்லை. ஒருமையில் பேசிய போலீஸார், என் அனுமதியின்றி செல்போனை அராஜகமாகப் பறித்துக்கொண்டனர். பின்னர், சவுக்கு சங்கரின் வீடியோவை எனது வலைதளத்தில் பயன் படுத்தியதற்காக சம்மன் என்று கூறி, அவர் எங்கே என்று கேட்டனர்.

இதை கண்டுபிடிக்க வேண்டிய போலீஸார் எங்களிடம் கேட்டது வேடிக்கை. தவிர, அந்த வீடியோகூட, எம் . பி .கனிமொழியின் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர் மூலமாகவே எனக்கு கிடைத்தது.

அதிமுகவின் பிரச்சாரத்துக்கு முட்டுக்கட்டை போட வேண்டும், பிரச்சாரப் பணியில் அதிமுகவை பின்னுக்குத் தள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படி செயல்படுகின்றனர்.

'நமது அம்மா' பத்திரிகையின் ஆசிரியர்நான். அரசு செய்யும்தவறுகளை மக்கள் மத்தியில் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு, கடமை எனக்கு இருக்கிறது. அதை முடக்க நினைக்கும் திமுக அரசின் அராஜகத்துக்கு ஆதரவாகச் செயல்படும் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

உங்கள் அபிமான தின தமிழ் — செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் செயற்குழு கூட்டம்

## திருப்பூரில் நடைபெற்றது



திருப்பூர் மார்ச்: 31

கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் சையது முஸ்தபா தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் இப்ராகிம் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். செயற்குழு கூட்டத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர்களுக்கு முழு ஆதரவு அளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்ப ட்டது. அது மட்டும் இன்றி அனைத்து தொகுதிகளிலும் தேர்தல் பணி குழு அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வடக்கு மாவட்ட தலைவர் சையது முஸ்தபா, செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் செயற்குழு கூட்டம் நடந்தது இதில் வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் பணிக்குழு அமைக்கப்பட்டு அனைத்து தொகுதிகளிலும் சீரிய முறையில் பணிகள் மேற்கொள்ள ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பூரில் உள்ள தெற்கு, வடக்கு அவிநாசி பல்லடம் என நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும், பெருந்துறை சட்டமன்ற தொகுதியை சேர்ந்த ஊத்துக்குளி, சூலூர் தொகுதியைச் சார்ந்த வடுகபாளையம் என ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பாடுபடுவோம் என தெரிவித்தார். பாஜக ஓட்டு திருட்டில் ஈடுபடுவது போல் அதிமுக ரோடு திருட்டில் ஈடுபடுகிறது. திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 44 வது 45 வது வார்டுகளில் இந்த ரோடு திருட்டு நடந்துள்ளது. வரும் தேர்தலில் இதற்கு அவர்களுக்கு தக்கப்பாடம் புகட்டுவோம் என தெரிவித்தார்.

# மிதிவண்டி பேரணி: ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



திருப்பூர் மார்ச் 31

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு மிதிவண்டி பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து மிதிவண்டி ஓட்டி பேரணியில் பங்கேற்றார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி(தனி), 113 திருப்பூர்(வடக்கு), 114 திருப்பூர்(தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. 126 அந்த வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர்திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு மிதிவண்டி பேரணியை கொடியசைத்து துவக்கி மிதிவண்டி ஓட்டி பேரணியில் பங்கேற்றார்கள். இப்பேரணியில் 100 மேற்பட்ட நபர்கள் இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி அவிநாசியில் முடிவடைந்தது



பஞ்சாயத்து பணியாளர்கள் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வை வலியுறுத்தி நடந்த பைக் பேரணியை மாவட்ட கலெக்டர் அழகுமீனா கொடியசைத்து துவக்கி வைத்தார்

## பொள்ளாச்சி

# எம்.ஆர்.எம் பவுண்டேஷன் சார்பில் மாண்புமிகு மங்கையர் விருது



கோவை மார்: 31

தேசிய மகளிர் தின விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி எனது உரிமைகள் எனக்கானது அறக்கட்டளை, கோவை மாவட்ட திருநங்கைகள் நல சங்கம் மற்றும் ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி இணைந்து நடத்திய மாண்புமிகு மங்கையர் விருது விழா உடுமலை சாலையில் அமைந்துள்ள சரஸ்வதி தியாகராஜா கல்லூரி டாக்டர் சேட்டு நினைவு ஹாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் எனது உரிமைகள் எனக்கானது அறக்கட்டளையின் நிறுவனர் ஸ்ரீ வீணா யாழினி வரவேற்புரை வழங்கினார். மேனகா காவல் ஆய்வாளர் அனைத்து மகளிர் காவல் நிலையம் பொள்ளாச்சி தலைமை உரையாற்றினார்.

திருநங்கைகள் திருநம்பிகள் ஆவண மையம் நிறுவனர் பிரியா பாபு சிறப்புரை வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர். இரா. வனிதாமணி, மகளிர் பாதுகாப்பு நலன் அறக்கட்டளை நிறுவனர் செல்வி இந்திராணி, முதலுதவி சமூக நல அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர்.அபு. இக்பால், பொள்ளாச்சி லாரி உரிமையாளர்கள் சங்க பொறுப்பாளர் மண்ணூர் ராமர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 25க்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாண்புமிகு மங்கையர் விருது வழங்கப்பட்டது

இறுதியாக எனது உரிமைகள் எனக்கானது அறக்கட்டளையில் துணைத்தலைவர் எம்.புவனேஸ்வரி அவர்களின் நன்றியுரையோடு நிகழ்ச்சி நிறைவு செய்யப்பட்டது.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதிகுட்பட்ட மத்திய பேருந்துநிலையம் வணிக வளாகம் மேல்தளத்தில் 18 வயது பூர்த்தியான அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜ்குமார் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ஈரோடு ஆட்சியர் தலைமையில்

# வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி முகாம்



ஈரோடு மார்ச் 31

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் வாக்குச் சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச் சாவடி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அந்த வகையில் பெருந்துறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொங்கு வேளாளர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேர்தல் நாளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் செயலி பயன்பாடு. வாக்குச்சாவடி செயல்முறைகள், ஈ வி எம் இயந்திரங்களை கையாளும் முறை, தேர்தல் பணிகளில் துல்லியமான தகவல் பரிமாற்றம் மற்றும் பதிவுகள் பராமரிப்பு ஆகிய முக்கிய அம்சங்கள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும். வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, கோபிசெட்டிபாளையம் மாநகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், பெருந்துறை வருவாய் வட்டாட்சியர் சரவணன், கோபி வருவாய் வட்டாட்சியர் கவிராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதி மாதவரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வழக்கறிஞர் கிருத்திகா ஏழுமலை வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அதிகாரி (ஆர்டிஓ) பெருமாள், வட்டாட்சியர் அருள் ஜோதி பெற்றுக்கொண்டனர்,



தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026நடைபெறுவதைமுன்னிட்டு,கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தோட்டக்கலைத்துறை சார்பாக, தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ரோஜா மலர்களை கொண்டு இந்த மை நமது தேசத்தின் வலிமை என்பதற்கான விழிப்புணர்வு முத்திரை அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பார்வையிட்டார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் . இந்திரா, துணை இயக்குநர் .குணவதிமாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை .ஏஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திருச்சி

# அமைச்சர் நேரு சிறை செல்வது உறுதி ராஜசேகரன்



திருச்சி, மார்ச். 31

அமமுக திருச்சி மேற்கு தொகுதி வேட்பாளர் ராஜசேகரன் செய்தியாளர்களிடம் பேசுகையில், அமைச்சர் நேரு 1200 கோடி ரூபாய் ஊழல் செய்ததற்கான ஆதாரங்கள் அமலாக்கத்துறையிடம் உள்ளதாகவும், ஹவாலா பணப் பரிமாற்றத்திற்கான ஆதாரங்களும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரிவித்தார். நேரு தேர்தலுக்கு முன்போ அல்லது பின்போ சிறை செல்வது உறுதி என்று கூறிய அவர் இந்த தேர்தலில் திமுக வீழ்த்தப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், நேருவின் அரசியல் வாழ்க்கை அஸ்தமிக்கும் என்றும் அவர் கூறினார்.

## மணப்பாறை

# விபத்து ஏற்படுத்தி நிற்காமல் சென்ற ஓட்டுனர் கைது



திருச்சி, மார்ச். 31

மணப்பாறை அருகே பாலப்பட்டியைச் சேர்ந்த விவசாயி வெள்ளத்துரை, கடந்த 18ஆம் தேதி வையம்பட்டி சுங்கச்சாவடி அருகே அடையாளம் தெரியாத கார் மோதி உயிரிழந்தார். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், விபத்தை ஏற்படுத்திய மதுரையை பூர்வீகமாகக் கொண்ட, ஆந்திராவில் பைனான்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் சின்னசாமி என்பவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதிக்கு

# கொ.ம.தே.க கட்சி சார்பில் வேட்பாளர் கே.நித்யானந்தம் அறிவிப்பு



கோவை மார்:31

பரபரப்பாக இயங்கி வரும் அரசியல் சூழலில் பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதிக்கு இந்தியா கூட்டணி சார்பாக போட்டியிடும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி வேட்பாளர் கே.நித்தியானந்தம் அவர்களை வேட்பாளராக தமிழக முதல்வர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பொள்ளாச்சி மாவட்ட,நகர திமுக பொறுப்பாளர்கள் இந்தியா கூட்டணி கட்சிகளான விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்ச்சஸ் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், காங்கிரஸ் கட்சிகளை சார்ந்த பொறுப்பாளர்கள் பொள்ளாச்சி வேட்பாளருக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவில் தேரோட்டம்



சுசீந்திரன், மார்ச். 31

தமிழ்நாட்டில் உள்ள பழமையான கோவில்களில் பறக்கை மது சூதனப்பெருமாள் கோவிலும் ஒன்று இந்த கோவிலில் வருடம் தோறும் பங்குனி மாதம் கொடியேற்றுத்துடன் திருவிழா துவங்கி பத்து நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு பங்குனி மாத திருவிழாவிற்காக கடந்த 22 ஆம் தேதி காலை கொடியேற்றுத்துடன் திருவிழா தொடங்கியது தினந்தோறும் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பெருமாள் அம்பாள் கருட வாகனத்தில் பவனி வரும் நிகழ்ச்சியும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன ஐந்தாம் திருவிழா அன்று கருடனுக்கு கண் திறந்து பெருமாள் காட்சியளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்ட நிகழ்ச்சி நேற்று காலை 9:55 மணிக்கு துவங்கியதுஇதில் விநாயகர் தேர் சுவாமி தேர் ஆகிய தேர்களில் அலங்கரிக்கப்பட்ட சுவாமிகளை தேரில் அமரச் செய்து ரத வீதியை பக்தர்கள் ஒரு முறை இழுத்துவலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெற்றது தொடர்ந்து இரவு 9 மணிக்கு சப்த வர்ணா நிகழ்ச்சியும் 9.30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட வெள்ளி கருட வாகனத்தில் சுவாமி வேட்டைக்கு எழுந்தருளல் நிகழ்ச்சியும் நடைபெற்றது 10ம் திருவிழாவான 31ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு வெள்ளி கருட வாகனத்தில் சுவாமி மேளதாளங்கள் முழங்க ஆரட்டு துறைக்கு எழுந்தருழும் நிகழ்ச்சியும் இரவு 11 மணிக்கு தெப்ப திருவிழாவும் நடைபெறுகிறது இதற்கான ஏற்பாடுகளை கோவில்களின் இணை ஆணையர்ஜான்சி ராணி கோவில் ஊழியர்கள் மதுசூதனப்பெருமாள் பக்தர்கள் இணைந்து செய்து வருகின்றனர்

### விளாத்திகுளத்தில்

# திமுக வேட்பாளர் மார்கண்டேயனுக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு



விளாத்திகுளம் மார்ச் 31

2026 சட்டமன்றத் தேர்தலில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கு திமுக வேட்பாளராக போட்டியிட தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினரான மார்க்கண்டேயனுக்கு மீண்டும் தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் வாய்ப்பு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சென்னையில் இருந்து வந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேனுக்கு எட்டையாபுரம் தேசிய நெடுஞ்சாலை விளாத்திகுளம் சந்திப்பில் செண்டை மேளம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து விளாத்திகுளம் ஆற்றுப்பாலத்தில் இருந்து தொண்டர்கள் புடைசூழ செண்டை மேளம் முழக்கத்தோடு ஆர்ப்பரித்து வந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேனை திமுக காங்கிரஸ்,கம்யூனிஸ்ட்,விடுதலை சிறுத்தைகட்சி, மதிமுக,தேமுதிக உள்ளிட்ட கூட்டணிக்கட்சிகளை சேர்ந்த 5000க்கும் மேற்பட்ட தொண்டர்கள் சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு வழி நெடுகிலும் உற்சாகத்துடன் வரவேற்றனர். அதனைத்தொடர்ந்து விளாத்திகுளம் நகர் பகுதியில் பிரச்சார வாகனத்தில் பலம் வந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேன் விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சாமி தரிசனம் செய்தார்.

# மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



திருப்பூர், மார்ச் 31

மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை பெரியார் காலனி கருப்பராயன் கோவில் வீதி தலைமை இடமாகக் கொண்டு அரசு அங்கீகாரத்துடன் செயல்பட துவங்கி முதல் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.


இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சுஜிதா தேவ விஷ்ணு உயிர் ஆர்கானிக். பிரபஞ்ச அறக்கட்டளை நிறுவனர் தங்கமணி ராமன். கலந்துகொண்டு அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் விழிப்புணர்வு மற்றும் அமைப்பிற்கு ஆதரவும் தெரிவித்தனர்.

சிறப்பு விருந்தினர்களின் முன்னிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவி தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது,

இந்நிகழ்வில் ,மக்கள் பொது மனித சமூக சேவை அமைப்பின் நிறுவனர் வினோத்குமார் அவர்களும் அமைப்பின் மற்ற முக்கிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் நிகழ்வில் அறக்கட்டளை. நிறுவனர் வினோத்குமார். தலைமை தலைவர்முருகானந்தம். தலைமை பொதுச் செயலாளர் பாபு, தலைமை துணைச் செயலாளர் முனியப்பன். தலைமை பொருளாளர் பழனிச்சாமி.தலைமை துணைப் பொருளாளர் சக்திவேல். தலைமை ஒருங்கிணைப்பாளர் கணேசகுமார்.வடக்கு மாவட்டதலைவர்சதீஷ்.தெற்குமாவட்ட தலைவர் ஈஸ்வரமூர்த்தி இந்நிகழ்ச்சியை சிறப்பு தொகுப்பாளர் பியூலா.மாவட்ட மகளிர் அணி தலைவிகள், மாநிலத் தலைவர்கள், மாவட்ட தலைவர்கள், மண்டலம், மற்றும் வார்டு, தலைவர்கள் உடன் இருந்தனர்.

### பைங்குளத்தில்

# ஊராட்சி பணியாளர்கள் சார்பில் வாக்கு பதிவு விழிப்புணர்வு ஊர்வலம்



புதுக்கடை, மார்ச்.31.

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பைங்குளம், முஞ்சிறை, விளாத்துறை, மெதுகும்மல் உட்பட 11 ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகளின் பணியாளர்கள், சுய உதவி குழுக்கள் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வை வலியுறுத்தும் விதமாக பைக் பேரணி நேற்று நடைபெற்றது.

கூட்டாலுமூடு பத்ரேஸ்வரி அம்மன் கோவில் வளாகத்தில் இருந்து துவங்கிய இந்த பேரணியை மாவட்ட கலெக்டர் அழகுமீனா கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த பேரணியில் பைக்கில் வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தி பதாகைகள் அமைக்கப்பட்டது. பேரணி சுமார் 3 கிலோமீட்டர் தூரம் வரை சென்று தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் நிறைவு பெற்றது. அங்கு விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ராஜகுமார், ,சாந்தி, திட்ட இயக்குனர் மைக்கேல் ஆண்டனி, கூட்டாலுமூடு பத்ரேஸ்வரி அம்மன் கோவில் தலைவர் குமரேசதாஸ் ,செயலாளர் ராஜகுமார் , பொருளாளர் முருகன், துணைத் தலைவர் சந்தோஷ்குமார், இணைச் செயலர் சதீஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெரியகுளத்தில்

# முதலில் வேட்பு மனு தாக்கல் செய்த நாம் தமிழர் வேட்பாளர் இரா.விமலா



தேனி மாவட்டம், மார்ச் 31

பெரியகுளம் 199 (தனி) சட்டமன்ற தொகுதிக்கான நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக இரா. விமலா, முதல் நாளிலேயே முதல் நபராக பெரியகுளம் சார்ஆட்சியர் ரஜத் பீடனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்த நிகழ்வில் நாம் தமிழர் கட்சியின் மாவட்ட செயலாளர் ஜெயக்குமார், மாநில பொறுப்பாளர் குணசேகரன், மாநில இளைஞரணி பாசறை ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் பாபு, ஒன்றிய செயலாளர் நிருபன் சக்கரவர்த்தி, நகர பொறுப்பாளர் குமரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### இனயம் கடலில்

# கட்டுமரத்திலிருந்து தவறி விழுந்த மீனவர் சாவு

புதுக்கடை, மார்ச். 31

புதுக்கடை அருகே உள்ள இனயம் புத்தன்துறை பகுதியைசேர்ந்தவர்லாரன்ஸ்.இவர்தனக்குசொந்தமான கட்டுமரத்தில் அதே பகுதியை சேர்ந்த அன்ஹாலிஸ் என்பவர் உடன் கடலில் சிப்பி பொறுக்க சென்றுள்ளார்.

அவர்கள் இனயம் புத்தன்துறை கடல் பகுதியில் கட்டுமரத்தை நிறுத்தி சிப்பி எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக லாரன்ஸ் கடலில்தவறிவிழுந்தார்.இதனைப்பார்த்தஅன்ஹாலிஸ் மற்றும் அக்கம்பக்கத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கொண்டிருந்த மீனவர்கள் சேர்ந்து லாரன்ஸை உடனடியாக கடலில் இருந்து மீட்டனர்.

அவர் மயங்கிய நிலையில் கடலில் இருந்து மீட்கப்பட்டதால் கரைக்கு கொண்டு வந்தனர். பின்னர் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்று அங்கு பரிசோதித்த போது, டாக்டர்கள் லாரன்ஸ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது தொடர்பான புகாரின் பேரில் புதுக்கடை போலீஸ் இன்ஸ்பெக்டர் மாடசாமி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

### தேங்காபட்டணம்

# மீனவ கிராம மக்களிடையே கலெக்டர் தேர்தல் விழிப்புணர்வு



நாகர்கோவில், மார்ச். 31

குமரி மாவட்டம் கடலோர மாவட்டம் என்பதால் மீனவர்கள் அதிகம் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பால மீனவர்கள் மீன்பிடித்தொழிலேயே தங்களுடைய வாழ்வாதாரமாக கொண்டு, தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். குறிப்பாக அண்டை மாநிலங்கள், வெளிநாடுகளுக்கு சென்று, மீன்பிடித்தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றனர். 5 வருடத்திற்கு ஒரு நாள் வரும் தேர்தல் திருவிழாவில் மேற்குறிப்பிட்ட இடங்களில் மீன்பிடித்து வரும் மீனவர்களும், அனைத்து மீனவ வாக்காளர்களும் தேர்தல் நாளான வரும் ஏப்ரல் 23ம் நாள் அன்று கண்டிப்பாக வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன்,

தேங்காய்பட்டணம் மீன்பிடித்துறைமுகத்தில் மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்று கொண்டிருந்த விசைப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்களிடம் வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

மேலும் தேர்தல் ஆணையத்தின் இலக்கான 100% வாக்குப்பதிவை எட்டும் நோக்கில், துறைமுகப் பகுதியில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சிமுகமைதிட்ட இயக்குநர்மைக்கேல்அந்தோணி பெர்னான்டோ, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூமுகம்மதுநசீர்,மீனவமக்கள்,துறைஅலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# திருச்சியில் அமைச்சர் நேரு வேட்பு மனு தாக்கல்



திருச்சி, மார்ச். 31

திருச்சி மேற்கு தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் கே.என்.நேரு, மேற்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சாலை தவவளனிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் கழகத் தோழர்கள் மற்றும் கூட்டணி கட்சித் தோழர்கள்இருந்தனர்.இந்தநிகழ்வு, தேர்தல்பணிகளின் முக்கிய கட்டத்தை குறிக்கிறது.

# குமரியில் விதிமீறலில் ஈடுபட்ட 2 கல்குவாரிகள் மூடல்

## போலீஸ் எஸ் பி ஸ்டாலின் அதிரடி



நாகர்கோவில், மார்ச். 31

குமரி மாவட்டத்தில் கல்குவாரிகள் சட்டவிரோதமாக இயக்கப்படுவதாக கிடைத்த தகவலின் படி மாவட்ட எஸ்பி டாக்டர் ஸ்டாலின் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுவருகிறார்.அதன்தொடர்ச்சியாக நேற்று தோட்டியோடு பகுதியில் சோதனை நடத்தியதில் 2 கல்குவாரிகள் சட்டவிரோதமாக செயல்பட்டதை கண்டறிந்து அந்த 2 கல்குவாரி களையும் மூட உத்தரவிட்டு உள்ளார்.

மேலும் சட்ட விரோதமாக இயங்கிய கல்குவாரிகள் மீது சோதனை நடத்தி நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் நடவடிக்கை பாய வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. சட்டவிரோதமாக இயக்கப்படும் கல்குவாரிகள் தனது தொடர் நடவடிக்கை மூலம் மூடப்படும் என்று எச்சரித்தும் உள்ளார். சட்ட விரோதமாக கல்குவாரிகள் இயங்கினால் அதற்கு பொறுப்பான அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விதிமுறை மீறல்களில் ஈடுபடும் கல்குவாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விதிமுறை மீறல்கள் கண்டு பிடிக்கப்படும் போது முறையாக சோதனை நடத்தி நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை பாயும் என்றும் எச்சரித்து உள்ளார்.

மாவட்ட எஸ்பியின் அதிரடி நடவடிக்கையை சமூக ஆர்வலர்கள் மற்றும் இயற்கை பாதுகாவலர்கள் வரவேற்று உள்ளனர்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறிஞ்சி கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் கொசுக்கள் மற்றும் நீரினால் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்கான பல்துறை கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட மலேரியா அலுவலர், மாவட்ட கொள்ளை நோய்த் தடும்பு பிரிவு மருத்துவர் அலுவலர், உதவி இயக்குனர் ஊராட்சிகள், உதவி இயக்குனர் பேரூராட்சிகள், ஆணையர் நகராட்சிகள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், செயல் அலுவலர்கள், பேரூராட்சிகள் சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் பிற அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாசுதேவநல்லூர் தொகுதி வேட்பாளர்

# ராஜாவுக்கு ரெயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு



புளியங்குடி,மார்ச், 31

வாசுதேவநல்லூர்தொகுதிக்குமாவட்ட செயலாளர்ராஜாதேர்வுசெய்யப்பட்டதை அடுத்து சென்னையில் இருந்து இரயில் மூலமாக பாம்புக்கோயில்சந்தை இரயில் நிலையத்திற்கு வருகை தந்த ராஜா எம்எல்ஏவிற்கு தொண்டர்கள் பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்

சென்னையில் திமுக வேட்பாளர் பட்டியலை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார் இதில் சங்கரன் கோவில் தொகுதி காங்கிரசக்கு ஒதுக்கப்பட்டது ஆகவே கடந்த தேர்தலில் அதிமுக அமைச்சர் ராஜலட்சுமியை எதிர்த்து போட்டியிட்டு சங்கரன் கோயிலில் வெற்றி பெற்ற ராஜா விற்கு தற்போது வாசுதேவநல்லூர் தொகுதி வழங்கப்பட்டது. வாசுதேவநல்லூர் தொகுதியில் கடந்த 49 வருடங்களாக திமுக நேரடியாக போட்டியிடவில்லை கடந்த தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுகவை சேர்ந்த சதன் திருமலைக்குமார் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தற்போது நேரடியாக திமுக போட்டியியிடுவதால் தொண்டர்கள் உற்சாகத்தில் இருக்கிறார்கள் நேற்று காலை சென்னையில் இருந்து இரயில் மூலமாக வருகை தந்த ராஜா விற்கு ரயில் நிலையத்தில் புளியங்குடி நகர செயலாளர்கள் அந்தோணிசாமி, நாகூர் கனி, தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அங்குள்ள பள்ளி வாசல் சென்று அங்குல ஜமாத் கமிட்டி நிர்வாகிகளிடம் ஆதரவு திரட்டினார். தொடர்ந்து புளியங்குடி வந்து சிந்தாமணி, டி என் புதுக்குடியில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தபின் அருகிலுள்ள உலக மீட்பர் ஆலயத்திற்கு சென்று அங்குள்ள பாதிரியார்களிடம் ஆசி பெற்றார். தொடர்ந்து புளியங்குடி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் யுஎஸ்டி சீனிவாசன், வாசு ஒன்றிய தலைவர் பொன் முத்தையா பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் செண்பக விநாயகம், பொதுக்குழு உறுப்பினர்கள் வேல் சாமி பாண்டியன் பத்திரம் சாகுல் ஹமீது, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, நகர துணை செயலாளர்கள் கருப்பசாமி காந்திமதி, ஆசைகனி, மாவட்ட மகளிர் அணி துணைஅமைப்பாளர்பொன்னுதுரைச்சி, காங்கிரஸ் கமிட்டி தலைவர் பால்ராஜ் முஸ்லிம் லீக் நகர தலைவர் அப்துல் ரகுமான், செயலாளர் சேக் காதர் மைதீன், மாவட்ட வலைதள பொறுப்பாளர் கவிதா, ராமலட்சுமி, தங்கராஜ், மேல்நீதி நல்லூர் ஒன்றிய செயலாளர் பால்ராஜ், மற்றும்கூட்டணி கட்சியான தேமுதிக,விசிக, மமக, தமுமுக, நிர்வாகிகள் புளியங்குடி நகர கவுன்சிலர்கள், உட்பட ஏராளமான கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்

# பேரூர் பட்டீஸ்வரர் கோவில் தேரோட்டம் கோவையில் கோலாகலம்



கோவை மார்ச்:31

கோவை அருகே உள்ள புகழ்பெற்ற மேலை சிதம்பரம் என அழைக்கப்படும் பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவிலில், பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று மிக விமர்சையாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு "பட்டீசா... பட்டீசா..." பேரூரா ... பேரூரா.."என முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர். கோவையின் மிகப்பழமையான மற்றும் பிரசித்தி பெற்ற திருத்தலமான பேரூர் பட்டீஸ்வரர் கோவிலில்,ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா 10 நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.அந்த வகையில்,இந்த ஆண்டிற்கான விழா கடந்த 24ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.பஞ்சமூர்த்திகளுக்குச் சிறப்பு யாக பூஜைகள் நடத்தப்பட்டு,மாலையில் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்வு தொடங்கியது.பேரூர் ஆதீனம் மற்றும் சிரவை ஆதீனம், நல்லறம் அறக்கட்டளை அன்பரசன் ஆகியோர் முன்னிலையில்,ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்துத் தேரை இழுத்தனர்.

அப்போது பக்தர்கள் எழுப்பிய "பட்டீசா பட்டீசா பேரூரா பேரூரா."என்ற சரண கோஷம் விண்ணை முட்டும் வகையில் அமைந்தது.

இந்தத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை தக்கார் விமலா,கோவில் உதவி ஆணையர் சத்தியவதி மற்றும் கோவில் ஊழியர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.மேலும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,பேரூர் உதவி கண்காணிப்பாளர் உள்ளிட்ட கால் ஆய்வாளர் 200 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.விழாவின் தொடர்ச்சியாக வரும் 31ஆம் தேதி இரவு பிரம்மாண்டமான தெப்பத் திருவிழா நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், 51 ஊத்தங்கரை.தனி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சிங்காரப்பேட்டை மாவட்ட எல்லை சோதனைச்சாவடியில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன தணிக்கை பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

# தொண்டாமுத்தூர் தொகுதி வேட்பாளர் அறிமுக கூட்டம்




கோவை மார்ச்:31

கோவை மாவட்டம் பச்சாபாளையம் பகுதியில் கழகப் பொதுச்செயலாளர், எடப்பாடியார் ஆணைக்கிணங்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணி, தொண்டாமுத்தூர் சட்டமன்றத்தொகுதி, வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

மக்கள் நலன் சார்ந்த எந்தத் திட்டத்தையும் திமுக அரசு செயல்படுத்தவில்லை. திமுக மீது கோபத்தில் உள்ள தமிழ்நாட்டு மக்கள் கழகப் பொதுச்செயலாளர், எடப்பாடி முதலமைச்சராக அரியணையில் ஏற்றுவார்கள். என்று கூறினார்.

## ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter, I, AJISHA S, D/O. P.Sam Raj, aged 25 years, permanently residing at 21-114 A, Parayan vilai, Manali, Arumanai (P.O), Kanyakumari District -629151, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council building, High Court Campus, Chennai - 600104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

AJISHA S

## ஆவணம் காணவில்லை

எனது கட்சிக்காரர் FED BANK FINANCIAL SERVICES LIMITED அலுவலகம் .160, 162,164, ராஜேஸ்வரி வளாகம், நாகர்கோவில் 629001

தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ளது. திருமதி. லட்சுமி க/பெ முருகேசன் D.NO 10/127/1, காந்திநகர், கூடன்குளம், திருநெல்வேலி627106 , நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்டம் மேற்படி நிறுவனத்திடம் வீட்டுக்கடன் விண்ணப்பித்துள்ளார். இந்நிலையில் திருமதி லட்சுமி க/பெ முருகேசன் அவருடைய அசல் தாய் பத்திரமான கிரைய பத்திரம் ராதாபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணஎண்1549/1996ஆவணபதிவுசெய்தநாள்18/11/1996, கடந்த 15/02/2025 தேதியில் மாலை சுமார் 5.00 மணியளவில் ராதாபுரம் பேருந்து நிலையத்திலிருந்து திருநெல்வேலி எடுத்து செல்லும் போது தொலைந்து விட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. எனவே பொதுமக்கள் மேற்படி ஆவணத்தை யாரிடமோ கிடைக்க பெற்றாலோ மற்றும் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றாலே 7 நாட்களுக்குள் எமது கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்

CONTACT
S.SOUNDAPPAN B.A,B.L,C.D.T
D.NO.9A 1ST FLOOR NALLATHAMBI STREET PALAYAMKOTTAI THIRUNELVELI 627002
CRN: CRR24035291



வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் முருகேசன் டிராக்டரில் மண்வெட்டியுடன் அமர்ந்து வந்து தனது ஆதரவாளர்களுடன் பேரணியாக சென்று வேட்புமனு தாக்கல் செய்தார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி புதிய தலைமுறை தொலைக்காட்சி மற்றும் மாவட்ட நிர்வாக சார்பில் நமது நாட்டின் ஜனநாயக கடமையை வாக்காளர்கள் உணரும் வகையில் 'என் நாடு என் ஓட்டு' 100% தேர்தலில் வாக்களிக்க வலியுறுத்தி கல்லூரி மாணவியர்களின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா, இணை இயக்குனர் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் சாந்தி ,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட அரசு தொடர்புடைய அலுவலர்கள், கல்லூரி மாணவியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர்மாவட்டம்டோல்கேட்பகுதியில்அமைந்துள்ளதனியார்திருமணமண்டபத்தில் சாய்ராம் கல்விக்குழுமம், சென்னை, LMES மையம் மற்றும் Pickmycareer இணைந்து நடத்தக்கூடிய "அடுத்த இலக்கு 2026" பள்ளி மாணவர்களுக்கான இலவச கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி, வேலூரில் ஞாயிறு அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் கல்வி வழிகாட்டிஆலோசகர்திரு.அஷோக்குமார்,தன்னம்பிக்கைபேச்சாளர்முனைவர்கார்த்திக் வேலு ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் தலைமைப்பண்பு குறித்து உரையாற்றினர். 2000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த நிகழ்வை சாய்ராம் கல்விக்குழுமத்தின் சேர்க்கை ஒருங்கிணைப்பாளர் சாம்பசிவம் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர். மேலும் கல்வி ஆலோசணை குறித்த கேள்விகள் மற்றும் தகவல்களுக்கு 044 42267777 மற்றும் 9884845678 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

## கன்னியாகுமரி

# சட்ட மன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மரிய ஜெனிபர் வேட்பு மனு தாக்கல் செய்தார்




நாகர்கோவில் மார்ச் 31

கன்னியாகுமரி சட்ட மற்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மரிய ஜெனிபர் வேட்பு மனு தாக்கல் செய்தார்..

வருகிற சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு நேற்று முதல் தாக்கல் செய்யலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்த நிலையில் ஆர்வமுடன் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் தமிழகத்தின் தென் கோடி முனையில் அமைந்துள்ள 229 சட்டமன்ற தொகுதியான கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடுவதற்காக அக்கட்சியின் வேட்பாளர் மரிய ஜெனிபர் தோவாளை வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்தார்.

அதை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் எங்களுடைய இலக்கு பெரியது கனவும் பெரியது ஆனால் பயணம் கடுமையானது ஆனாலும் எங்களுடைய உழைப்பை போட்டு கொண்டு இருக்கின்றோம். மற்ற அரசியல் கட்சிகள் அவர்களுடைய வெற்றிகளையும் இருப்பிடத்தையும் தக்கவைத்துக்கொள்ள அரசியல் செய்கின்றார்கள் ஆனால் நாங்கள் ஒரு புதிய வெற்றியை உருவாக்க நாம் தமிழர் கட்சி அரசியல் செய்கிறது என செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார்.



கோவைமாவட்டம்மேட்டுப்பாளையம்தொகுதிதிமுகவேட்பாளராகதிமுகதலைவரால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட எஸ்.எம்.டி.கவிதா கல்யாண சுந்தரம் சென்னையில் தமிழக முதலமைச்சரும்திமுகதலைவருமான மு.க.ஸ்டாலின்அவர்களைநேரில்சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## பாப்பிரெட்டிப்பட்டி

# சட்டமன்ற உறுப்பினர் பி. பழனியப்பன் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் உற்சாக வரவேற்பு



தருமபுரி மார்ச் 31

தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி. பழனியப்பன் திமுக தலைமை கழகம் அறிவித்துள்ளதை தொடர்ந்து அவர் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரூர் தருமபுரிக்கு வருகை தந்தார். பட்டாசுகள் வெடித்தும், மேளதாளங்கள் முழங்க பெண்கள் ஆரத்தி எடுத்தும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் பிரபு ராஜசேகர், சக்திவேல், நகர செயலாளர் நாட்டான்மாது, இளைஞரணி சிவகுரு, அசோக் குமார் கோவிந்தன், மாவட்ட மகளிர் அணி ரேணுகாதேவி மற்றும் தேமுதிக, விசிக கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# கனிமங்களை கர்நாடகா மாநிலத்திற்கு கடத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்

## தமிழ்நாடு மாநில மணல் லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் மனு



கிருஷ்ணகிரி மார்ச் 31

தமிழ்நாடு மாநில மணல் லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் சார்பில் மாநிலத் தலைவர் யுவராஜ் தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அதில் தினசரி ஒரு லட்சம் டன்னுக்கு அதிகமான கனிமங்கள் கர்நாடக மாநிலத்திற்கு ஓசூர் வழியாக தமிழக கனிம வளங்களை கடத்தி அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டியும், 15 தினங்களுக்குள் கனிம வளங்களை கடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத நிலையில் காவல் துறை மற்றும் நீதிமன்றம் மூலமாக வழக்கு தொடரப்படும் என புகார் மனுவில் கூறப்பட்டிருந்தது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, மாவட்ட ஆட்சியர் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் கிரஷர் இது என் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார். மேலும் மாதத்திற்கு 60 கிரஸரிலிந்து கனிம வளங்கள் வெளி மாநிலங்களுக்கு செல்வதாகவும் தெரிவித்தார். 200க்கும் அதிகமான கிரஷர்கள் இயங்கி வரும் நிலையில் கனிமவளத்துறை 99 கிரஷர்களுக்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளதாகவும், அனுமதி இல்லாமல் இயங்கும் ரிசர்வ் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வேதனையுடன் தெரிவித்தார். இந்த நிகழ்வின்போது பொதுச்செயலாளர் தினேஷ், தமிழ்நாடு மணல் லாரி சங்கத்தின் தலைமை நிலைய செயலாளர் வினோத், சென்னை மணல் லாரி சங்க தலைவர் ஐயப்பன், ராணிப்பேட்டை லாரி ஓனர் உரிமையாளர் சங்க தலைவர் ரத்தினம், உள்ளிட்ட பல்வேறு மாவட்ட சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழகவெற்றிக்கழகம்சார்பில்அணைக்கட்டுசட்டமன்றதொகுதியில்போட்டியிடும்... தளபதி விஜய் அவர்களின் ஆசிபெற்ற வெற்றி வேட்பாளர் வேல்முருகன் வேலூர் மேற்கு மாவட்டசெயலாளரை அறிமுகப்படுத்தினார்தளபதி விஜய் அவர்கள்அதனைதொடர்ந்து அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் உள்ள நிர்வாகிகள் தனசேகர் தொகுதி பொறுப்பாளர் அணைக்கட்டு தொகுதி அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார். மேலும் அவருடன் செயலாளர்கள் பார்த்திபன், ராமச்சந்திரன், காளிதாஸ், ஜெகன், பவித்ரன், பிரவீன், ராஜேஷ், ஜெயசீலன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ஜோதி பஞ்சவர்ணம் ஆகிய நிர்வாகிகள் உடன் இருந்தனர். கட்சி நிர்வாகிகளுக்கு கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.